REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ [illegible] 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆடி 16உ புதன் (31—7—57) ★ ★ வெளியூர்: ஆடி 17உ வியாழன் (1—8—57) [இதழ் 39

இரண்டாவது கப்பல் கட்டும் துறை தென்னாட்டில் அமையுமா?

புதுடில்லி, ஜூலை 31—

இரண்டாவது கப்பல் கட்டும் துறை எங்கு ஏற்படுத்துவது என்பதுபற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

மங்களூரில் ஏற்படுத்தப்படுமா, அல்லது கார்வாரில் ஏற்படுத்தப்படுமா என்றும் தெரியவில்லை.

விடுதலைத் தீ அணையாமல் இருக்க...

'குருதியை நெய்யாக வார்ப்போம்— தசையை விறகாகத் தருவோம்'

'இந்த முடிவிலிருந்து எங்களைத் திருப்ப எவராலும் முடியாது'

'நமது மன்னாதி மன்னர்களையும் மதியாத வடவரை நாம் மட்டும் மதிப்பது ஏன்?'

மயிலையில் அண்ணா உரிமை முழக்கம்

"தமிழர்களை—தென்னாட்டவரை டெல்லிக்காரர்கள் மதிக்கிறார்களா? மதித்ததுண்டா, இதுவரையில்? காமராசர் டெல்லி சென்றால், அவரை எந்த வடநாட்டுத் தலைவராவது வந்து வரவேற்கிறாரா? வேண்டுமானால், டெல்லியில் உள்ள தமிழர்கள் வரவேற்கலாம்—வரவேற்கிறார்கள்; ஆனால், வடநாட்டவர் மதிக்கிறார்களா—இல்லையே!

"காமராசரை மதிக்காமல் இருக்கட்டும்; ஆனால் நமது மன்னாதிமன்னர்களையும் அவர்கள் மதித்ததில்லை. நமது ஆழ்வாராதிகளை, நாயன்மார்களை அவர்கள் மதித்ததில்லையே!

"ஆனால் அங்கே இருக்கும் மீராவை இங்கே தெரியும்; நமது கடைக்குட்டிக்கு 'மீராபாய்' என்று பெயர்கூட வைப்போம்; ஆனால் இங்கே உள்ள மாணிக்கவாசகரை அங்கே தெரியுமா என்றால், தெரியாது; ஏன்?

"இப்படி வடநாட்டவர் தென்னாட்டவரை மதித்ததில்லை—மதிப்பதில்லை—மதிக்கப்போவதும் இல்லை!

"ஆனால் ஆச்சாரியார்களும், காமராசர்களும் வடவரை மதித்துத் தொடர்புகொள்ள வேண்டுமென்பதற்குக் காரணம், இவர்கள் எல்லாம் அவர்களோடு சேர்ந்து ஒரே விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள்—தோழர்களாயிருந்தவர்கள் என்பதுதானே தவிர, வேறென்ன? ஆகவே, இப்போது உள்ள இந்தத் தொடர்புதான்—கடைசித் தொடர்பு! இந்தத் தலைமுறைதான், வடநாட்டோடு தொடர்புகொண்ட கடைசித் தலைமுறை! இனிமேல், வரக்கூடிய தலைமுறைகளில், வடவரையும் தென்னவரையும் இணைக்கக்கூடிய பாசக்கயிறு எதுவுமே இல்லை—பற்றுக்கொள்வதற்கு இடமே இல்லை—இதுதான் உண்மை நிலை! இந்த உண்மை நிலைதான் தமிழகத்தில் இன்று வளர்ந்து வரும் விடுதலை இலட்சியத்தின் அடிப்படை. இந்த விடுதலைத் தீ அணையாமல் பார்த்துக்கொள்வதுதான் எங்கள் வேலை. வேண்டுமானால் பாருங்கள்—உரியகாலத்தில் இந்தத் தீயிலிருந்து நெருப்பு மூட்டி, குளிரைப் போக்கிக்கொள்ளுகிறவர்கள் காங்கிரசாராகத்தான் இருக்கக்கூடும்!

"எனவே, இன்று தமிழகத்தில் தோன்றியுள்ள இந்த விடுதலைத் தீ அணைந்துபோகாமல் 'பார்த்துக்கொள்ள நாங்கள், எங்கள் இரத்தத்தையே நெய்யாக வார்க்கவும், தசையை விறகாகத் தரவும் தயங்கமாட்டோம்! இந்த முடிவிலிருந்து எங்களை யாரும், எத்தகைய் சபலத்தைக் காட்டியும் திருப்பிவிட முடியாது! அல்லது சாபமிட்டு அழித்துவிடவும் முடியாது! நாங்கள் நாட்டு விடுதலைக்காகப் பலியாக எங்களை ஒப்படைத்துவிட்ட ஆட்டுக்கடாக்கள்!"

இவ்வாறு அண்ணா அவர்கள், 26—7—57-ல், சென்னை—மயிலையில், சிந்தனையாளர் கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் பேசியதாவது:—

சமநிறைவுள்ள சட்டசபையா?

"இன்றைய சட்டசபை எப்படி அமைந்திருக்கிறது? 150 பேர் ஆளும் கட்சியில் — காங்கிரசில் அமர்ந்திருக்கிறார்கள். ஆனால் எதிர்க்கட்சியில் 50 பேர்தான் அமர்ந்திருக்கின்றோம். இரண்டு பக்கத்திலும் சரிசமமான பலம் இன்று இருக்கவில்லை.

"கனடா நாட்டில் நீங்கள் பார்த்தால் இப்போது அங்கு ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் 10 அல்லது 15 உறுப்பினர்கள்தான் வித்தியாசம் இருக்கிறது; ஆனால் இங்கு அப்படி இல்லை. சரிசமமான பலம் பெறுகிற அளவுக்கு எதிர்க்கட்சி வளர்ந்திருந்தால், ஆளும் கட்சிக்கும் அச்சம் எப்போதும் இருக்கும்; அந்த அச்சம்தான் சனநாயகத்தைக் காப்பாற்றும்.

"எனவே இன்றைய நிலையில், சனநாயகத்தைச் சமன் செய்கிற சமநிறைவுள்ள ஒரு சபையாகச் சென்னை சட்டசபை இருக்கவில்லை. எதிர்காலத்தில் என்னென்ன நாம் செய்ய வேண்டும் என்ற பாடத்தை நமக்குப் போதிக்கும் சபையாகத்தான் இன்றைய சட்டசபை இருக்கிறது.

தி. மு. கழகத்தின் அரசியல் பெருந்தன்மை

"சட்டசபையில் திராவிட முன்னேற்றக் கழகத்தவர் 15 பேர்தான் இருக்கின்றனர் என்றாலும், நம்மை ஆளும் கட்சியினர் அலட்சியப்படுத்துகிறார்கள் என்று சொல்ல முடியாது. இதற்குக்காரணம், ஒன்று—நாம்காட்டி வரும் அரசியல் பெருந்தன்மை; இரண்டாவது நாம் நடந்துகொள்ளும் முறை.

எப்படி நடப்பரோ என்ற ஐயம்!

"இந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர்—நாகர்கள், ஆப்பிரிக்க நாட்டு நீக்ரோவர்கள், சிவப்பு இந்தியர்கள், நீலமலைத் தொதவர்கள் போல இருப்பார்களோ என்று, முதலில் சிலர் ஐயப்பட்டனர். நான் சட்டசபைக்குச் சென்று பதவிப் பிரமாணம் எடுத்தபோது, காமராசர் என்னைப் பார்த்துக்கொண்டிருந்த காட்சி பத்திரிகைகளில் படமாக வந்திருந்தது; அந்தக் காட்சி, 'இவர்களெல்லாம் சட்டசபைக்கு வந்துவிட்டார்களே, எப்படி நடந்துகொள்வார்களோ?' என்ற அந்த ஐயத்தைக் காட்டுவதாகத்தான் இருந்தது.

"ஆனால் இன்று, எங்களை அவர்களுக்குப் புரிந்துவிட்டது; அவர்களை நாங்கள் புரிந்துகொண்டிருக்கிறோம் என்பதும் அவர்களுக்குத் தெரிந்துவிட்டது.

நாம் கடைபிடிக்கும் கண்ணியத்தின் எதிரொலி

"திராவிட முன்னேற்றக் கழகத்தவர் தெரிவிக்கும் கருத்துக்களைப் பொறுப்போடு கவனிக்க வேண்டும் என்ற எண்ணம் காங்கிரசாருக்கு ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம், நாம் பாராளுமன்றத்தில் கடைபிடிக்கவேண்டிய கண்ணியத்தைக் காட்டிவருகிறோம்.

"சட்டமன்றத்தில் உள்ள காங்கிரசாரில் சிலர், நம் மீது நீங்காத வெறுப்புக் கொண்டவர்களாயிருக்கலாம்; சிலர், நம்மை அலட்சியப்படுத்தவேண்டும் என்றுகூட நினைப்பவர்களாயிருக்கலாம்; ஆனால் எஞ்சிய காங்கிரசார், 'திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு சக்தி—எதிர்காலத்தில் இந்த நாட்டை ஆளக்கூடிய ஒரு சக்தி' என்பதை உணர்ந்திருக்கிறார்கள். இதனை நடைபெற்ற சட்ட சபையின் நடவடிக்கைகள் காட்டும்.

"உதாரணமாக நான் ஒன்று கூறமுடியும்; சில நாட்களுக்கு முன்பு, தோழர் அன்பழகன் அவர்கள் போலீஸ் இலாகா தலைவர்மீது எழுப்பிய சில குற்றச் சாட்டுக்களை விசாரிக்க சர்க்கார் ஒரு பகிரங்க விசாரணைக் குழு நியமித்திருக்கிறார்கள். இது போன்ற சம்பவங்கள் சட்ட சபையில் அதிகமாக நிகழாக ஒன்றாகும். எதிர்க்கட்சியினர் ஏதாவது கூறினால், 'இது வெறும் கூச்சல்; ஆதாரமில்லாத புகார்' என்றுதான் ஆளும் கட்சி அலட்சியப்படுத்தும். ஆனால், இன்று நாம் எழுப்பிய குற்றச் சாட்டுகளை விசாரிக்க சர்க்கார் குழு அமைத்திருக்கிறது. இது ஒன்றேபோதும்—'தி. மு. கழகம் சட்ட சபைக்குச் சென்று என்ன சாதிக்க முடியும்?' என்று கேட்கிறவர்களுக்குப் பதில் தர!

"நான் கூறுவது, குற்றச்சாட்டுகள் என்ற அளவில்தான்; அவை ஒன்றும் இன்னும் நிரூபிக்கப் பட்டுவிடவில்லை. விசாரணைக்கு ஆளாக்கப்பட்டிருக்கும் அந்த அதிகாரி மாசுமறுவற்றவரா, அல்லது மாசு உடையவரா என்பதைக் குழு கண்டறிந்து கூறும்.

(4-ம் பக்கம் பார்க்க)

'தென் மாநிலங்களுக்குத் திட்டத்தில் நியாயம்கிடைக்கவில்லை'

இந்த உண்மையைடெல்லி கடவுளுக்கு உணர்த்துவீர்'

பதவியிலிருந்து விலகும் கவர்னரிடத்தில் சஞ்சீவ ரெட்டி, கோபால ரெட்டி முறையீடு

ஐதராபாத், ஜூலை 30—

டெல்லிசர்க்கார், ஒரு கடவுள்; அப்படி டெல்லி சர்க்கார் ஒரு கடவுளானால், திட்டக் குழு அதற்கு மேற்பட்டஒரு கடவுள். அந்தத் திட்டக் குழுவில் உறுப்பினராகப் போகிறார், திரு. திருவேதி அவர்கள். அவரைப் போன்ற ஒரு சிறந்த நிர்வாகி திட்டக் குழுவில் இடம் பெறுவது கண்டு மகிழ்கிறேன்; அவர், திட்டக் குழுவில் ஒரு உறுப்பினர் என்ற முறையில், ஆந்திரப் பிரதேசத்திற்கு உதவிகள் பல செய்ய முடியும் என்று நம்புகிறேன்"

என, ஆந்திர முதன்மந்திரி சஞ்சீவ ரெட்டி, பதவியிலிருந்து விலகி, திட்டக் குழு உறுப்பினராகச் செல்லும் ஆந்திர கவர்னர் திருவேதிக்கு இன்று நடத்திய விருந்தொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவரை அடுத்துப் பேசிய ஆந்திர நிதிமந்திரி கோபால ரெட்டி குறிப்பிட்டதாவது:—

"திட்டமிடுவதில் மண்டல ரீதியாகத் திட்டமிடும் கொள்கை வேண்டும் என்பதை, திட்டக் குழுவிற்கு உணர்த்தியாக வேண்டும்.

"தொழில் அபிவிருத்தியில் இரண்டாம் திட்டத்தில் தென்னாட்டிற்கு நியாயமாக எவ்வளவு பங்கு கிடைக்க வேண்டுமோ அவ்வளவு பங்கு கிடைக்கவில்லை. ஆந்திரப் பிரதேசமோ, சென்னையோ, கேரளமோ, மைசூரோ நியாயமாகப் பெற்றிருக்க வேண்டிய பங்கினைப் பெற்றிருக்கவில்லை என்ற இந்த உண்மையைத் திட்டக் குழு கவனித்தாக வேண்டும்"

இருவரும், கவர்னர் திருவேதியின் சேவைகளையும், திறமைகளையும் வெகுவாகப் பாராட்டினர்கள்.

உணவுப் பொருள்களைக் குவிப்போர்

மத்திய மந்திரியின் வழக்கமான அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 30—

'உணவுப் பொருள்களை முடக்க விடாமல் செய்ய எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவோம்' என்று, பல மாதங்களாக விடுத்துவரும் அறிவிப்பையே மற்றுமோர் முறை, மக்கள் சபையில் உணவு மந்திரி அஜீத் பிரசாத் ஜெயின் விடுத்திருக்கிறார்.

"ஆந்திரப் பிரதேச வியாபாரிகள் உணவு விலை ஏற்றத்திற்குக் காரணமாயிருக்கிறார்கள்; தீய நோக்கத்தோடு, உணவுப் பொருள்களை அவர்கள் குவித்து வைக்கிறார்கள்; தென் அரிசி மண்டலம் உருவாக்கப் பட்டபோது கேரளத்திற்கு அரிசி தேவைப்பட்டது; ஆனால் இந்த வியாபாரிகள் அரிசி அனுப்ப மறுத்து வருகிறார்கள். இரயில்வே அதிகாரிகளிடம் கேட்டபோது, வாகன்கள் ஏராளமாக இருக்கின்றன என்றும், ஆனால் அரிசி வியாபாரிகள் அதனை உபயோகித்துக் கொள்வதில்லை என்றும் கூறுகின்றனர்; காரணம், இவர்கள் அரிசியை முடக்கி வைத்து விலைகளை ஏற்ற நினைப்பதுதான்" என்றும் அமைச்சர் கூறியிருக்கிறார்.

சீக்கிரமே, சர்க்கார், உணவுப் பொருள்களைக் கொள்முதல் செய்கிற திட்டம் ஒன்றை அமுல் நடத்த உத்தேசித்திருக்கிறது என்றும் அவர் கூறினார்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 31—7—57 புதன்

தமிழாக இருக்க வேண்டும்

இந்தியத் துணைக் கண்டத்தில் ஒலிபரப்பு ஆரம்பமாகி 30 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ளது. இது சம்பந்தமாக வானொலி நிலையத்தினர் விழாவும் நடத்தினர். இந்த நிலையில், வெள்ளையன் காலத்தில் இருந்த வானொலி அமைப்புக்கும், சுதந்திரம் கிடைத்த பின்னர் இயங்கிவரும் வானொலி அமைப்புக்கும் உள்ள மாறுபாடுகளை ஆராய்ந்து, சென்னை வானொலி நிலையத்தைப் பொறுத்தமட்டில் ஆவன செய்யவேண்டிய அவசியமானவைகளை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

1927-ல்தான் முதல் முதல் வானொலி நிலையம் பம்பாய் நகரில் ஏற்படுத்தப்பட்டது. சென்னையில் 1938-லும் திருச்சியில் 1939-லும் வானொலி நிலையம் ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவில் மொத்தம் 28 நிலையங்கள் உள்ளன; இது உண்மையில் மகிழ்ச்சிக்குரியதாகும்.

மற்ற இடங்களில் உள்ள வானொலி நிலையங்கள் அடைந்துள்ள மாறுதல்கள், அங்கு மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் முதலியவற்றை எண்ணிப் பார்க்கும்போது, 'ஏன், சென்னை ஆமைவேகத்தில் முன்னேறி வருகிறது' என்று எண்ணத் தோன்றுகிறது. வானொலி, மாநில அரசாங்கத்திற்கு உட்பட்ட ஒன்றல்ல என்ற காரணத்தினால்தான் இந்த நிலையோ என்று நினைக்கவும் தோன்றுகிறது.

17 ஆண்டுகளுக்கு முன்பு 5 கிலோவாட் சக்தியுள்ள ஒலிபரப்புடன் துவக்கப்பட்ட திருச்சி வானொலி நிலையம் ஆரம்ப நிலையிலேயே உள்ளது. மற்ற இடங்களில் 20 முதல் 50 கிலோவாட் வரை ஒலிபரப்பு சக்தி உயர்த்தப்பட்டுள்ளது. அகில இந்திய அடிப்படையில் ஆராய்ந்து பார்த்தால், இத்துறையில் சென்னை புறக்கணிக்கப்பட்டு, தாழ்ந்த நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லாமல் இருப்பதற்கில்லை.

புதிய மாநில அமைப்புக்கு முன்னர்—ஆந்திரம், கேரளம், கன்னடம், சென்னையுடன் இணைந்திருந்தபோது எவ்வாறு எல்லா மொழிகளுக்கும் சென்னை வானொலி நிலையத்தில் இடம் தரப்பட்டதோ அதே நிலை இன்றும்—மாநிலங்கள் மொழி அடிப்படையில் பிரிந்த பின்னரும் நீடித்துவருகிறது.

பிரிந்த மாநிலங்களில் தனியே வானொலி நிலையம் இருக்க, சென்னை வானொலி நிலையத்தில் மட்டும் ஏனைய மொழிகளுக்கு இடம் தரவேண்டும் என்று வாதாடுவது நியாயமாகாது. அங்கெல்லாம் தமிழுக்கு இடம் தராத நிலை நீடிக்கும்போது, சென்னை மட்டும் ஒரு கதம்ப நிலையமாக இருப்பதை மாற்றி, முதலிடம் தமிழுக்கு தர வேண்டியது மிக்க அவசியமானது—நியாயமானது என்றே எவரும் கூறுவர். இது திராவிட கூட்டாட்சி கோரிக்கைக்கு முரணானதும் அல்ல—திராவிட மொழிகள் ஒன்றை ஒன்று பாதிக்காமல் எல்லாம் வளரவேண்டும் என்பதே நம் கருத்தாகும்.

இன்று தென்னாட்டில் ஏற்பட்டுவரும் மொழி உணர்ச்சியை ஒடுக்க மத்திய அரசு வேண்டுமென்றே இந்த அநீதியை இழைத்து வருகிறது என்று கூறினாலும், மறுக்க இயலாது என்றே உறுதியாக நம்புகிறோம்.

தமிழ் காவலர்களும், நியாயம் பேசுவோரும், சிறந்த ஏடுகளும் பலமுறை இந்த அநீதியை ஆட்சியாளருக்கு சுட்டிக்காட்டியும்கூட, 'செவிடன் காதில் ஊதிய சங்கு' என்ற நிலையே இன்றும் நீடித்துவருகிறது.

தமிழ்நாட்டில், பெயரளவிலேயே வானொலி நிலையம் இயங்குகிறது என்பதற்கு, சென்னை இரண்டாவது ஒலிபரப்பு நிலையத்தில் முழுக்க மற்ற மொழிகளில்—அதிலும் குறிப்பாக தெலுங்கு மொழியில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படுவதே போதிய சான்றாகும்.

சென்னை மாநிலத்தில் வாழும் வேற்று மொழியினருக்கு வசதியளிக்க இம்முறை கையாளப்படுகிறது என்று வாதாடக்கூடும். உண்மை இதுவானால் டில்லியிலும், பம்பாயிலும், கல்கத்தாவிலும் ஏராளமான தமிழர்கள் வாழ்கிறார்களே, அங்கெல்லாம் தமிழர்களுக்கென்று நிகழ்ச்சிகள் நடத்தப்படாததேன் என்று எண்ணிப் பார்க்க விரும்புகிறோம்.

சென்னையில் எல்லா நிகழ்ச்சிகளையும் தமிழில் நடத்தவேண்டும் என்றால், போதுமான அளவிற்கு எல்லாத் துறைகளிலும் தமிழ் கலைஞர்கள் கிடைக்கவில்லை என்று கூறும் அளவிற்கு தமிழர் தாழ்ந்துவிடவும் இல்லை; அப்படிப் பேசுவதும் விதண்டாவிவாதமாகும்.

வானொலி நிலையம் மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டு இருக்கும் இந்த நிலையில் வேறு மாநிலத்தவர்களும், வேறு மொழி பேசுபவர்களும் வானொலி நிலையங்களின் பொறுப்பாளராகவும், மேற்பார்வையாளராகவும், இயக்குபவர்களாகவும் இருக்கும்வரை, இந்த அவலநிலை மாறும் என்று நம்புவதற்கில்லை.

வானொலி நிலையங்கள் மாநில அரசுகளின் நேரடி நிர்வாகத்திற்கு விடப்பட்டு, ஆட்சியில் இருப்பவர்களுக்கும் மொழி உணர்ச்சி ஊற்றெடுக்குமானால் ஒருவேளை நாம் எதிர்பார்க்கும் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு, தமிழர் பெருமைபடத்தக்க நிலை ஏற்படக்கூடும். அதுவும் 'தமிழ்நாடு' என்று பெயரிடக்கூட முன்வராத இன்றைய மாநில அரசு இதனைச் செய்யுமா என்பது சந்தேகத்திற்கு இடமளிப்பதாகும்.

அதுவரையில், தமிழா விருப்பப்படி அறிவிப்புகள் எல்லாம் தமிழிலும் கூறப்படும் நிலை ஏற்படும் என்றோ, இரண்டாவது சென்னை ஒலிபரப்பில்தமிழுக்கு முதலிடம் தரப்படும் என்றோ, பிறமொழி நிகழ்ச்சிகள் வெகுவாகக் குறைக்கப்படும் என்றோ, தமிழுக்கு உரிய இடமும், தமிழ்ப் புலவர்களுக்கும் கலைஞர்களுக்கும் சிறப்பு அளிக்கப்படும் என்றோ நாம் நம்புவதற்கில்லை.

சவமொழி இந்தியாவின் தேசீய மொழி ஆகாதது ஏன்?

இந்தி தேர்ந்தெடுக்கப்பட்டது எதனால்?

இராசேந்திர பிரசாத் தரும் அருமையான விளக்கம்

ஐதராபாத், ஜூலை 29—

காந்தியார் இந்தியை ஏன் தேர்ந்தெடுத்தார் தேசீய மொழியாக?

இந்தக் கேள்விக்கு குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் பதில் தந்திருக்கிறார், இங்கு!

"சவமொழியை (சமஸ்கிருதத்தை)த் தேர்ந்தெடுக்காமல், இந்தியை காந்தியார் ஏன் தேர்ந்தெடுத்தார் என்றால், சவமொழி நமது கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கக் கூடியதுதான் என்றாலும் அது, வழக்கில் உள்ள — பேசப்படுகிற ஒரு மொழியாக இன்று இருக்கவில்லை; எனவே, அதனை தேசிய மொழியாகத் தேர்ந்தெடுத்தால், பல கோடி மக்களுக்கும் புதிதாக ஒரு மொழியைக் கற்றுக் கொள்ளுகிற கடினமான வேலையைத் தந்திருக்கும். அதனால்தான் சமஸ்கிருதத்தைத் தேர்ந்தெடுக்கவில்லை; இந்தி, வேறெல்லா இந்திய மொழிகளையும் விட ஏற்கனவே அதிகமான மக்களால் பேசப்பட்டு வரும் மொழியாக இருந்தது; அதனால்தான், அது தேசிய மொழியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது"

என்று டாக்டர் இராசேந்திர பிரசாத் அவர்கள், இந்தி பிரசார சபைத் தலைவரான சத்திய நாராயணாவைப் பாராட்டிப் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

சவமொழிக் கலாச்சாரமான ஆரிய கலாச்சாரம்தான் தங்கள் கலாச்சாரம் என்பதை வெளிப்படையாகக் கூறும் இந்த வாதம் புரிந்த டாக்டர் இராசேந்திர பிரசாத் அவர்கள், வழக்கம் போல, 'இந்தி மொழியால் இதர மொழிகள் அழிந்து விடாது' என்றும் கூறியிருக்கிறார்.

"ஒவ்வொரு மொழியும் ஒரு மலர்; தேசிய மொழி இந்த மலர்களை இணைத்து ஒரு மாலையாகத் தொடுக்க உதவும் வாழை நார்; இப்படித் தொடுக்காவிட்டால், இதர மொழிகள் தனித்துப் போய்விடும்"

என்றும் வியாக்கியானம் செய்திருக்கிறார், டாக்டர் பிரசாத்!

இந்தி வெறியர்களுக்கு பிரகாசா எச்சரிக்கை

காசி, ஜூலை 30—

"மற்றவர்கள்மீது இந்தி மொழியை கட்டாயமாகச் சுமத்துவது கூடாது. இந்தியைப் பரப்பும் விஷயத்தில் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். ஒற்றுமை உணர்வை நாம் இழந்து விட்டோமானால், மொழி தகராறினால் நமது சுதந்திரத்திற்கே ஆபத்தும் ஏற்படலாம்!

"வடநாட்டிலுள்ளவர்கள் ஏதேனும் ஒரு தென்னாட்டு மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும்; அப்படி செய்தால்தான் இப்போது தென்னிந்திய மக்களிடம் உள்ள அச்சத்தைத் தவிர்க்க முடியும்"

என்று, முன்னாள் சென்னை கவர்னரும் இப்போதைய பம்பாய் கவர்னருமான பிரகாசா அவர்கள் தெரிவித்துள்ளார்.

நீக்ரோவர் விருந்துண்ணுவதைச் சகியாத வெள்ளையர்கள்

கல்லால் தாக்கி கார்களுக்குத் தீ வைத்தனராம்!

அமெரிக்காவில் நீக்ரோவர் படும்பாடு

சிகாகோ, ஜூலை 29—

வெள்ளையர்கள், நீக்ரோவருடன் இங்கு கைகலந்தனராம்!

தென் சிகாகோவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தின் போது போலீசார், இருசாராரையும் எச்சரிப்பதற்காகத் துப்பாக்கிக் குண்டுகளை வெடித்தனராம்!

கடந்த பல வருடங்களில் இது போல இனப்பகை காரணமாக சண்டை எழுந்தது இல்லை என்று போலீசார் கூறினர்.

சுமார் 100 நீக்ரோவர்கள் பூங்கா ஒன்றில், உல்லாச விருந்து நடத்திக்கொண்டிருந்தனராம். இதைக் காணச் சகியாத சுமார் 50 வெள்ளை இன வெறியர்கள் விருந்தில் களித்திருந்த நீக்ரோவர் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தினாராம். இதனால் சுமார் 25 நீக்ரோவர் காயமடைந்தனர் என்றும் இதுவே கைகலப்பிற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

இந்த வெள்ளை இன வெறியர்கள் நீக்ரோவர்கள் ஓட்டிவந்த கார்களில் 12 கார்களைத் தீயிட்டுக் கொளுத்தவும் செய்தனராம். அதன் பின்னரே, போலீஸ் வந்ததாம்.

வெள்ளையர்கள் அத்தோடு நில்லாமல், நீக்ரோவப் போலீசாரையும் கல்லால் அடித்துத் தாக்கியதாகவும் அத்துடன், போலீஸ் கார்களையும் சேதப்படுத்தியதாகவும் தெரியவருகிறது.

என்ன காரணம்?

சென்னை, ஜூலை 27—

தாழ்த்தப்பட்டோர் நலத் திட்டத்தின்கீழ் 1956—57-ம் ஆண்டில் மொத்தம் 29 தையல் இயந்திரங்களை வேலூர், குடியாத்தம், ஆரணி, அரக்கோணம் ஆகிய பகுதிகளில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தரப்பட்டுள்ளன என்றும், தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள தாழ்த்தப்பட்டவர்கள் யாரும் இதற்காக மனு செய்துக்கொள்ளவில்லை என்றும் அமைச்சர் கக்கன் சட்டசபையில் அறிவித்தார்.

தென்னவர் மீது

கோதுமை படையெடுப்பா?

"நபருக்கு இரண்டு படி விற்கவேண்டும்; ரூ. 50 முன்பணம் கட்டவேண்டும்" என்ற நிபந்தனைகள் எதுவுமின்றி வியாபாரிகளுக்கு ஒரே சமயத்தில் 1 டன் வரையில் கோதுமை விநியோகம் செய்வதென்று மத்திய சர்க்கார் முடிவு செய்துள்ளதாம்.

11,500 டன் கோதுமை ஆவடியிலுள்ள கிடங்கில் இப்போது வைக்கப்பட்டுள்ளதாம்.

இரண்டாவது கப்பல் தொழிற்சாலை

'அந்நிய உதவி கிடைக்கலாம்' என்கிறார் அமைச்சர்

இரண்டாவது கப்பல் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கு அந்நிய மூலதன உதவி கிடைக்கலாம் என்றும், இது குறித்துப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாகவும் மத்தியப் போக்குவரத்து மந்திரி லால்பகதூர் சாஸ்திரி பாராளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்திருக்கிறார்.

வரிப் பணம் ரூ. 50 ஆயிரம் பாழ்!

சைக்கிள் வாங்கியதில் சென்னை சர்க்காருக்கு ஏற்பட்ட நஷ்டம்

மதுவிலக்கு இலாகாவின் உபயோகத்திற்கென சென்னை சர்க்கார் சைக்கிள்கள் வாங்கியதில் சுமார் ரூ. 50 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக பொதுக் கணக்குத் தணிக்கைக் குழு மதிப்பிட்டிருக்கிறது.

1949—ம் ஆண்டில், மதுவிலக்கு இலாகாவின் உபயோகத்திற்கென சென்னை சர்க்கார், விலைப் புள்ளிகள் கோரி நகரத்தில் உள்ள ஒரு கடையிலிருந்து ரூ. 1,29,268 செலவில் 856 சைக்கிள்கள் வாங்கினர். இவை செக்கோஸ்லாவேக்கியா நாட்டில் தயாரிக்கப்பட்டவையாகும்.

இந்தச் சைக்கிள்கள் இரண்டு ஆண்டுகள்கூட பயன்படவில்லை என்றும், சாதாரணமாக ஒரு சைக்கிள் சராசரியாக 5 ஆண்டுகள் பயன்படுவதுண்டு என்றும், இந்தச் சைக்கிள்களோ இரண்டரை ஆண்டுகூட சராசரியாகப் பயன்படவில்லை என்றும், இவற்றைப் பழுதுபார்க்க முடியாத வகையில் இவை செக் நாட்டில் தயாரானதனி ரகமானவை என்றும், இதனால் சர்க்காருக்கு ரூ. 50 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்றும் தணிக்கைக் குழு கூறியிருக்கிறது.

போலீஸ் அதிகாரி மீது குற்றச்சாட்டு

விசாரிக்க நீதிபதி இராமசாமி நியமனம்

சென்னை, ஜூலை 29—

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலான வி. ஆர். இராசரத்தினம் மீது எழுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசாரிக்க, உயர்நீதிமன்ற நீதிபதியான பி. என். இராமசாமி கேட்டுக்கொள்ளப்பட்டார்; அவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார் என்ற தகவலை, மந்திரி பக்தவத்சலம் சென்னை மேல் (சட்ட) சபையில் தெரிவித்திருக்கிறார்.

சட்டசபையில் புகார் எழுப்பப்பட்டபோது, உயர் நீதிமன்ற நீதிபதி மூலம் விசாரணை நடைபெறும் என்று சர்க்கார் தெரிவித்திருந்தது அல்லவா?

இதுகுறித்து தங்களுக்கு ஏதும் தெரியவில்லை என்றும், இந்தச் செய்தி மக்களிடை பெரும் பரபரப்பு ஊட்டியிருப்பதாகவும், எனவே அதுபற்றி விவாதிக்க சட்டசபை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என்றும், மேல் சபையில் ரஜாகான் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். பின்னர் மந்திரி நிலையை விளக்கிவிட்டு, மேற்கண்ட தகவலையும் தந்ததின் பேரில், தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

சிறைத் தண்டனைகள் குறைக்கப்படும்

சுதந்திரப் போராட்ட நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சிறைத் தண்டனைகள் குறைக்கப்படும். இந்தச் சலுகை இராணுவப் படைக் கைதிகளுக்கும் தரப்படும். 10 ஆண்டுகளுக்கும் அதற்கு மேற்பட்ட தண்டனைகளுக்கும் ஓர் ஆண்டு என்ற ரீதியில் ஒரு மாத கால அளவு வரை தண்டனைக் குறைப்பு அளிக்கப்படும்.

கட்சிச் செல்வாக்குள்ள மாவட்டங்களுக்கு சர்க்கார் சலுகையா?

நெய்வேலி விவசாயிகளின் துயர் துடைக்க உடனடிச் செயல்முறை வேண்டும்

சட்டசபையில் தோழர் எம். செல்வராஜ் விளக்கம்

சென்னை சட்ட சபையில் நிதி ஒதுக்கல் மசோதாமீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்ட கழக உறுப்பினர் தோழர் எம். செல்வராஜ் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது :—

"தென்னாற்காடு மாவட்டத்தில், நெய்வேலித் திட்டப் பிரதேசத்திலுள்ள மக்களின் நிலை சம்பந்தமாக இந்தச் சபையில் தரப்பட்ட ஒத்திவைப்புப் பிரேரணை நிராகரிக்கப் பட்டது; எனவே, அது சம்பந்தமான சில குறிப்புகளைத் தரவிரும்புகிறேன்.

"நெய்வேலித் திட்டப் பிரதேசத்தில் வசிக்கும் மக்கள், திட்டத்திற்காகத் தங்கள் நிலங்களை அரசாங்கத்திற்குத் தருவதற்கு தயாராக உள்ளனர்; ஆனால் அரசாங்கம் அவர்களுக்கு மார்க்கெட் நிலவரப்படி போதிய நஷ்டஈடு கொடுப்பதில்லை. இது சம்பந்தமான சட்டம் 1953-ல் நிறைவேற்றப்பட்டது; 1947-ம் ஆண்டில் நிலங்களுக்குக் கொடுக்கப்பட்டுவந்த அடிப்படையின்கீழ் அந்தச் சட்டத்தில் நஷ்டஈடு நிர்ணயிக்கப்பட்டது; ஆனால் இன்று, நிலங்களின் மதிப்பு மாறியிருக்கிறது. இன்று ரூ. 1,000—1,500 பெறக்கூடிய நிலங்களுக்கு அந்தச் சட்டப்படி ரூ. 250 தான் நஷ்டஈடாகத் தரப்படுகிறது. இதை அந்த வட்டார மக்கள் பலமுறை மகஜர்கள் மூலமாகவும், நேரிலும் அமைச்சருக்குத் தெரிவித்துள்ளனர். ஆனால் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

"மேலும் அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்யும் அதிகாரிகள் அந்த வட்டார மக்களுக்கு முன்னறிவிப்புகூடத் தராமல் திடீரென்று வந்து ஆர்ஜிதம் செய்துவருகிறார்கள். மேலும் அந்த வட்டாரத்தில் விவசாயம் செய்யும் மக்கள் தங்கள் நிலங்களில் மணிலாப் பயிரையும் புகையிலையையும் சாகுபடி செய்து வருகிறார்கள்; மகசூல் இருக்கும் சமயத்திலேயே அதிகாரிகள் அவர்களைக் கேட்காமல் 'டிராக்டர்'களையும் 'புல்டோசர்'களையும் கொண்டு வந்து மகசூல்களை அழித்துவிடுகிறார்கள். இப்படி அழிக்கப்படும் மகசூல்களுக்காகவும் அவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்படுவதில்லை.

"அரசாங்க அதிகாரிகளிடத்தில் அந்த வட்டார மக்கள் இந்தக் குறைகளையெல்லாம் வற்புறுத்தியும் அவர்கள் அலட்சியமாகவே இருந்துவிடுகின்றனர். அவர்களுடைய குறைகளை அரசாங்கத்திற்குத் தெரிவித்தும் இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் அந்த வட்டாரத்தில் ஒரு பெரிய குழப்பமும் அமைதிக்குப் பங்கமும் ஏற்படக்கூடிய நிலைமை நிலவிவருகிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

"அந்த வட்டாரத்தில் வீடுகளை அரசாங்கத்தார் எடுத்துக்கொள்வதற்காக அந்த வீட்டுக்காரர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கும்போது, அவைகள் 20—30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட வீடுகளாக இருந்தால் குறைந்த அளவில்தான் தருகின்றனர்; இது வீட்டுக்காரர்களுக்கு மிகவும் அதிருப்தியாக இருக்கிறது.

"மேலும் விவசாயிகளின் நிலங்களை அரசாங்கத்தார் எடுத்துக்கொள்ளும்போது பயிரிடுவதற்கு அவர்களுக்கு வேறு இடத்தில ஒரு நபருக்கு 2 ஏக்கர் வீதமே நிலங்களை ஒதுக்குகின்றனர்; அவர்கள் 5 செண்ட் நிலத்தில் குடியிருந்துகொண்டு 2 ஏக்கர் நிலத்தில் பயிரிட்டுக் கொண்டிருக்கட்டும் என்று சர்க்கார் திட்டம் வகுத்திருக்கிறது. குடியிருப்பதற்கு 5 செண்ட் நிலம் போதுமானதல்ல. மேலும் அவர்கள் தங்களுடைய வீட்டை விட்டு வெளியேறும்போது வேண்டிய வசதிகளைச் செய்து தருவதாக அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால் அதற்கான வசதி செய்து தரப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே, அவர்களுக்குக் கூட்டுறவு முறையில் வீடுகளைக் கட்டித் தரவேண்டும்.

"அதற்காகும் பணத்தை சில வருடத் தவணைகளில் திருப்பித் தருவதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

"விருத்தாசலம் டவுனைப் பொறுத்தவரையில் 1938-ம் ஆண்டிலிருந்து தண்ணீர் திட்டம் ஒன்றை வகுத்து அதற்கு வரி வசூல் செய்துகொண்டு வருகிறார்கள். அந்தத் திட்டத்திற்கு 1953—ம் ஆண்டிலேயே சர்க்காருக்கு மனுச் செய்துகொள்ளப்பட்டது; ஆனால் இன்றுவரையில் அந்தத் திட்டம்பற்றி எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படவில்லை; இதுபற்றி அங்கு பெரும் அதிருப்தி நிலவுகிறது.

"மேலும், நெய்வேலி சுரங்கத் திட்டப் பகுதியிலிருந்து வெளியேறும் மக்கள் குடியிருப்பு வசதிக்காக இந்நகருக்கு வருவதால், இத்திட்டத்தை இந்த ஆண்டிலாவது சர்க்கார் நடத்தித் தருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அத்திட்டத்திற்கு மொத்தம் ரூ. 5 இலட்சம் செலவாகும்; அங்குள்ள பஞ்சாயத்து போர்டு ரூ. 2 இலட்சம் தருவதற்குத் தயாராக இருக்கிறது, ரூ. 3 இலட்சம்தான் தேவை; அதை அரசாங்கமேஅளித்து திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்.

"திருச்சி மாவட்டம் பெரம்பலூர் தாலுக்காவில் கீழ்முத்தூர் கிராமத்தில், 1,500 ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதிதரும் ஏரி ஒன்று இருந்தது; அது தூர்ந்து போய் விட்டதன் காரணமாக அங்கு நஞ்சையாக இருந்த நிலங்கள் இப்பொழுது புஞ்சையாகத்தான் பயிரிடப்படுகின்றன. ஏரியின் தண்ணீர் 40 நாட்களுக்குத்தான் வருகிறது. அங்குள்ளவர்கள் அந்தத் தண்ணீராலேயே பயிர் செய்ய வேண்டிய நிலைமையில் இருக்கின்றனர்; ஆனால் அவர்களிடமிருந்து இன்னமும்நஞ்சைபபயிர்வரிவசூல் செய்யப்படுகிறது; 'சர்சார்ஜ்' உட்பட ஏக்கருக்கு ரூ. 16 வசூல் செய்துகொண்டு வருகிறார்கள். இது சம்பந்தமாகக் கடந்த 20 ஆண்டுகளாகவே அரசாங்கத்திற்கு மகசர்கள் சமர்ப்பித்துக் கொண்டு வருகிறார்கள்; போன மாதத்திலும்கூட முதல் மந்திரியிடம் ஒரு மகசர் கொடுக்கப்பட்டிருக்கிறது; அதிகாரிகளும்கூட, 'அங்கெல்லாம் விளைவு இல்லை; வரி வஜா செய்யவேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளனர்; ஆனால் இதுவரையிலும் அவ்வாறு தரப்படவில்லை.

"அந்த ஏரியை உடனடியாக மராமத்து செய்து கரைகளை உயர்த்தி வளப்படுத்தி, தொழுதூர் வாய்க்காலிலிருந்து ஒரு வாய்க்காலை இந்த ஏரிக்குத் திருப்பிவிட்டால் 1,500 ஏக்கராக்களில் நஞ்சை பயிரிட முடியும்; அந்த வட்டாரத்திலுள்ள மக்களுக்கும் தக்க பயன் ஏற்படும்.

"இம்மாநில அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, எந்த எந்த வட்டாரத்தில் யார் யார் செல்வாக்கு உள்ளவர்களாக இருக்கிறார்களோ அவரவர்களுடைய வட்டாரத்தில்தான் நல்ல வேலைகள் நடைபெறுகின்றன. உதாரணமாக தென்னாற்காடு மாவட்டம் பல துறையிலும் பிற்போக்கு மாவட்டமாக இருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டம் என்பதாக சர்க்கார் வெளியிட்டிருக்கும் புத்தகத்தில் பார்த்தாலும் இது நன்கு தெரியும். அங்கு 72 கிராமங்களுக்குத்தான் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மின்சார வசதி பரவலாக்கப்பட்டிருக்கிறது; ஆனால் செங்கற்பட்டு மாவட்டத்தில் 273 கிராமங்களுக்கு பரவலாக்கப்பட்டிருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்தில் நீர்ப்பாசன வசதிக்காக ரூ. 31,86,000 செலவாகியிருக்கிறது; ஆனால் செங்கற்பட்டு மாவட்டத்தில் ரூ. 62,70,000 செலவாகிறது.

"விவசாயிகளுக்குக் கடன் கொடுத்து உதவுவதிலும் தென் ஆற்காடு மாவட்டத்திற்கு ரூ. 14 இலட்சம் அளித்துள்ளனர்; ஆனால் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு ரூ. 81 இலட்சம் கொடுத்துள்ளனர்.

"ஒரு மாவட்டத்திற்கும் இன்னொரு மாவட்டத்திற்கும இந்த மாற்றாந்தாய் மனப்பான்மை எதற்காக காட்டப்படுகிறதோ தெரியவில்லை?

"அரசாங்கம் சனநாயக முறையில் செயல்படுகிறது; எல்லா மாவட்டங்களுக்கும் பாரபட்சம் இன்றி உதவுகிறது; அவற்றை அபிவிருத்தி செய்கிறது என்று சொல்லிக்கொள்ளும் நோத்திலேயே அடுத்தடுத்து உள்ள இந்த இரண்டு மாவட்டத்திலேயே மிகப் பிற்போக்கான நிலைமையில் இருக்கும் தென்னாற்காடு மாவட்டத்திற்கு அதிக உதவி அளிக்கவில்லை என்பது நன்றாகத் தெரிகிறது.

"ஆகவே, இனியாவது இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல், தென்னாற்காடு மாவட்டத்தில் மிகவும் பிற்பட்ட சமூகத்தவர்கள் உள்ளனர் என்பதற்காகவாவது அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துதரவேண்டும். இனி மேலாவது வரும் ஐந்தாண்டுத் திட்டத்தில் சில மாவட்டங்களுக்கு முன்பே அதிகமாகச் செலவிட்ட காரணத்தால் அவற்றில் சிறிது குறைத்து, முன்பு குறைவாகச் செலவிட்டுள்ள மாவட்டங்களில் அதிகமாகச் செலவிட நிதி ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்."

டாக்டர் வரதராசுலு (நாயுடு)வுக்கு நினைவுச் சின்னம்

அசோகாபுரி, ஜூலை 30—

தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள அசோகபுரியில், இயற்கையெய்திய டாக்டர் பி. வரதராசுலு அவர்களின் நினைவாக ஒரு மௌன ஊர்வலம் நடைபெற்றது. டாக்டர் வரதராசுலு கிராம மக்களுக்குச் செய்த நல்ல பல காரியங்களை நினைத்து பலர் கண்ணீர் வடித்தனர். நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் பலர், அவருடைய அரிய பணிகளைப் பாராட்டிப் பேசினர்.

டாக்டர் வரதராசுலு அவர்களுக்கு நினைவுச் சின்னம் எழுப்ப வேண்டும் என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

டாக்டர் நாயுடுவின் பிரிவால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

முற்றுப்புள்ளி!

சென்னை, ஜூலை 29—

அரசாங்க அலுவலாளர்களின் பெயரால் எந்த இடத்தையோ, வீதியையோ, நிறுவனங்களையோ, நிலையங்களையோ மற்றும் அவை போன்றவற்றையோ பெயரிட்டு அழைக்கும் வழக்கத்தை அரசாங்கம் தடை செய்கிறது. இந்த வழக்கத்தால் உசிதமற்ற விளம்பரங்களும், கூட்டுறவுகளும் ஏற்படலாமென அரசாங்கம் கருதுகிறது.

'டாக்டர் சத்தியவாணிமுத்து பகுத்தறிவு மன்றம்'

அண்ணா அவர்கள் திறந்துவைத்தார்

ப. உ. சண்முகம், வி. எஸ். கோவிந்தராசன் கலந்துகொண்டனர்

சென்னை, ஜூலை 30—

"இந்த வட்டாரத்தில் டாக்டர் சத்தியவாணிமுத்து பகுத்தறிவு மன்றம் அறிவுப் பணியாற்றி தி. மு. கழகத்திற்குத் துணையாக இருக்க வேண்ம்"

என்று கூறி, அண்ணா அவர்கள், 27—7—57-ல் சென்னை—பெரம்பூரில், டாக்டர் சத்தியவாணிமுத்து பகுத்தறிவு மன்றத்தை, கூடியிருந்த மக்களின் கைத்தட்டலுக்கிடையே திறந்துவைத்தார்.

தோழர் ஏ. எஸ். ஜேசுபாதம் தலைமையில் மன்றத் திறப்பு விழா நடைபெற்றது.

தோழர் டேப்-இராதாமாணிக்கம் துவக்கத்தில், இனிய இன எழுச்சிப் பாடல்களைப் பாடினர்.

அடுத்து தோழர் ஜார்ஜ் அவர்கள் பேசுகையில், சுயமரியாதை இயக்க வரலாற்றின் சுட்டிக்காட்டி, தீண்டாமை ஒழிப்புக்காக பாடுபட்ட பெருமையும் தனிச் சிறப்பும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சாரும் என்று குறிப்பிட்டார். இந்தியாவின் விடுதலைக்காகப் போராட்டம் நடைபெற்ற காலத்தில் ஒதுங்கியும், வேறு வேலையில் ஈடுபட்டும் இருந்த இன்றையக் காங்கிரஸ்காரர்கள், 'தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி 1923-ல் பிறந்துகூட இருக்கமாட்டாரே; மதுரையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் அவருக்கு எப்படித் தெரியும்?' என்று பேசுவது கேலிக்குரியதாகும் என்றார்.

அடுத்து தோழர் வி. எஸ். கோவிந்தராசன் பேசுகையில், தேர்தலுக்குப் பிறகு தி. மு. க. வளர்ச்சி பெற்றுள்ளது என்பதற்கு, நாட்டில் நாள்தோறும் கூட்டங்களும், மன்ற நிகழ்ச்சிகளும் நடைபெறுவதே போதிய சான்றாகும் என்றார். இந்த வளர்ச்சியைக் கண்டு பொறாமையடைந்து சிலர் தவறான பிரச்சாரத்தில் ஈடுபட்டிருப்பது வியக்கத்தக்கது என்றும் அன்றாடப் பிரச்சினைகளைப் பற்றிப் பேச முடியாதவர்கள் தி. மு. கழகத்தை ஏசுவதும், தூற்றுவதும் தவிர வேறு எதுவும் தெரியாதவர்கள் என்றும் கூறினார். தி. மு. கழகம் ஆக்கவேலையில் ஈடுபட்டு விடுதலை இயக்கமாகத் திகழ்கிறது என்றும் அவர் விளக்கினார்.

அடுத்து தோழர் ப. உ. சண்முகம் எம். எல். ஏ., அவர்கள் பேசுகையில், சத்தியவாணிமுத்து பகுத்தறிவு மன்றத் துவக்க விழாவில் பேசுவதற்கு வாய்ப்பளித்தற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு திராவிட முன்னேற்ற கழகம் அடைந்துள்ள இலட்சிய வளர்ச்சி பற்றிப் பேசியதாவது:-

"தி. மு. க. வளர்ச்சி பற்றி இந்திய ஏடுகள் எழுதுவதைக் கண்டு சிலர் எரிச்சல் கொண்டு, உள்ளதை இழந்தவர்கள்போல் வேதனைப்படுகின்றனர்.

"இன்றையத்தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் வடநாட்டில் ஒலிக்கிறது. சட்டசபையில், 'திராவிடநாடு திராவிடருக்கே' என்ற முழக்கம் கேட்கிறது; கடந்த நான்கு மாத காலத்தில் இவ்வளவு மாறுதல் என்றால், இன்னும் 5 ஆண்டுகளில் அண்ணா அவர்கள் பேசப் பேச, நிச்சயம் ஆட்சியாளர்கள், மக்கள் மாறியதுபோல மாறிவிடுவார்கள்."

அடுத்து அண்ணா அவர்கள் பேசுகையில், 'மாநிலங்களை டில்லி கட்டுப்படுத்தவில்லை—அடக்கி ஆட்சி செலுத்தவில்லை' என்று நிதி அமைச்சர் கூறிய கூற்றை மறுத்து ஆதாரங்களைச் சுட்டிக்காட்டி, 'மாநில அரசின் ஏகோபித்த வேண்டுகோளை பல முறை டில்லி ஏற்க மறுத்துள்ளது' என்று வலியுறுத்திக் கூறினார்.

தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் நன்றி நவில கூட்டம் இரவு 9-30 மணிக்கு முடிந்தது.

இந்தியாவில் அந்நியர் எண்ணிக்கை

சீனர்களே மிக அதிகமாம்!

புதுடில்லி, ஜூலை 29—

இந்தியாவில் உள்ள அந்நியர்கள் எண்ணிக்கை பற்றி தகவல் தந்துள்ள டில்லி சர்க்கார், 'சீனர்களே மிக அதிகம்' என்று கூறியிருக்கிறது.

"1957-ம் ஆண்டு சனவரி முதல் தேதிவரை பதிவான அந்நியர்களின் எண்ணிக்கை 28,746; இதில் சீனர்கள் மட்டும் 6,385 ஆகும்.

இந்தச் சீனர்களில் 5,659 பேர் வியாபாரிகள்; 715 பேர் மாணவர்கள்; 11 பேர் 'மிஷனரி' வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள் என்று கூறப்பட்டுள்ளது.

திபெத்தியர்களையும் சேர்த்துக் கொண்டால், சீனர் எண்ணிக்கை இன்னும் அதிகம் ஆகும்; 1,936 வியாபாரிகள்; 6 மாணவர்கள்; 'மிஷனரி' வேலையிலீடுபட்டிருப்போர் 23 பேர்—ஆக 1,965 திபெத்தியர்கள் இந்தியாவில் இருக்கின்றனர்.

சீனர்களுக்கு அடுத்தாற்போல ஆப்கானியர்களும், பட்டாணியப் பழங்குடி மக்களும் அதிகம் வாழுகின்றனர்; 4,828 ஆப்கானியர்களும், 4,263 பட்டாணியப் பழங்குடியினரும் வசிக்கின்றனர்.

ஈரான் மக்களில் 2,581 பேர் வசிக்கின்றனர்.

மேலை நாட்டைச் சேர்ந்த அந்நியர்களில் அமெரிக்கரே அதிகம் 2,390 அமெரிக்கர்கள் — 384 வியாபாரிகள்; 132 மாணவர்கள்; 1,880 'மிஷனரி' வேலைகளிலீடுபட்டோர்—வசிக்கின்றனர்.

இந்தப் பட்டியலில் காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த அந்நியர்கள் சேர்க்கப்படவில்லை; அவர்கள், இந்தியாவில் தங்களைப் பதிவு செய்துகொள்ளத் தேவை இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும் என்றும் சர்க்கார் குறிப்பு கூறுகிறது.

மாற்றலாகி வந்த அரசாங்க ஊழியர்கள்

சர்க்கார் தரும் சலுகை

மாநில சீரமைப்பு காரணமாக திருவாங்கூர்—கொச்சி மாநிலத்திலிருந்து சென்னைக்கு மாற்றப்பட்ட அரசாங்க அலுவலாளர்கள் இரண்டு மாதச் சம்பளம் முன்பணம் வாங்கியுள்ளனர்; இதில் ஒரு மாதச் சம்பளத் தொகை மட்டும் திரும்பப் பெறப்படும். ஒரு மாதச் சம்பளத் தொகை பிடிக்கப்படமாட்டாது. இச்சலுகை சென்னை மாநிலத்திலுள்ள எல்லா அரசாங்க அலுவலகங்களுக்கும் மாற்றப்பட்டு வந்துள்ள அனைவருக்கும் உண்டு.

குளித்தலை விவசாயிகள் துயரம்

அமைச்சர் பக்தவத்சலத்திடம் முறையீடு

மு. கருணாநிதி தலைமையில் தூதுக்குழுவிற்கு பேட்டி

தஞ்சை, ஜூலை, 31—

சென்னை விவசாயத் துறை அமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்களை தோழர் மு. கருணாநிதி அவர்களின் தலைமையில் தோழர்கள் முத்துக்கிருஷ்ணன், முத்து, அன்பில் தருமலிங்கம், பராங்குசம் ஆகியோர் 28-ந் தேதியன்று கல்லணையில் பேட்டி கண்டனர்.

அப்போது அவர்கள் அமைச்சரிடம், மிராசுதாரர்களால் தங்களுக்கும் தங்கள் சகோதர விவசாயிகளுக்கும் ஏற்படும் இன்னல்களையும், அவர்கள் விவசாயிகளை பயிரிடாமல் தடுப்பதையும் எடுத்துரைத்தனர். அத்துடன், தங்களுக்கு விவசாயம் செய்ய அனுமதியும் பாதுகாப்பும் அளிக்குமாறும் அவர்கள் அமைச்சரை வேண்டிக் கொண்டனர்.

அமைச்சர் சிறிதுநேரம் உரையாடி, சென்ற ஆண்டில் பயிர்ச் செலவு செய்தவர்கள் இந்த ஆண்டிலும் அந்நிலங்களைப் பயிரிடச் செய்ய ஏற்பாடு செய்யப்படுமென்றும், வார சாகுபடி செய்தவர்களுக்கு அதன் விகிதமும், மற்றவிதம் சாகுபடி செய்தவர்களுக்கும் அவ்வாறே நடைபெறவும் ஏற்பாடாகுமென்றும் சொன்னதாகத் தெரிகிறது.

திருச்சி கலெக்டர் திரு ஆர். எஸ். மலையப்பன் பேட்டியின் போது உடனிருந்தார்.

தியாகிகள் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி

தோழர்கள் ஏ. கோவிந்தசாமி க. அன்பழகன் கோரிக்கை

'தியாகிகளின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளிக்க சென்னை அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது' என்று, நிதி அமைச்சர் சட்டசபையில் அறிவித்தார்.

ஏ. கோவிந்தசாமி

இப்போது தியாகிகள் பற்றி அரசாங்கத்திற்கு அக்கறை பிறந்ததை தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் பாராட்டினார்; உண்மையில் ஏழைகளாக உள்ள தியாகிகளுக்கு சர்க்கார் முடிவு பயன்படுமாறு செய்யவேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

க. அன்பழகன்:— "தியாகிகளின் பிள்ளைகள் கல்லூரிகளிலும், மற்ற கல்வி நிலையங்களிலும் கட்டாயமாகச் சேர்த்துக் கொள்ளப்படவேண்டும்; அவ்வாறு செய்யாமல் இலவசமாகக் கல்வியளிப்பதற்கு முன் வந்துவிட்டால்மட்டும் பயன் இருக்குமா?"

நிதி அமைச்சர், உறுப்பினரின் கருத்துக்களை வரவேற்றார்.

சென்னை அரசாங்க தீவிர போக்குவரத்து பஸ் தொழிலாளர் சங்கம்

சென்னை, ஜூலை 31—

சங்கத் தலைவர் திரு. கி. மனோகரன், திருவாளர்கள் பணிக்கர், கண்ணப்பன் ஆகியோர் 29-7-57 அன்று அரசாங்க போக்குவரத்து அலுவலகத்திற்குச் சென்று பார்வையிட்டனர்; டைரக்டர்களுடன் கலந்து பேசினர்.

30—7—57-ல், அமைச்சர் வெங்கட்ராமன் கூட்டிய மாநாட்டில் தலைவர் மனோகரன், செயலாளர் டாக்டர் கிருஷ்ணபிள்ளை, திருவாளர்கள் பணிக்கர், கண்ணப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

'நயே பைசா' முறையால் ஏற்பட்டுள்ள குழப்பத்தை அவர்கள் சுட்டிக் காட்டினர்; அதுபற்றி கண்டக்டர்களுக்கு உதவியான ஒரு திட்டத்தை அமைச்சர் ஆராய இசைந்துள்ளார் என்றும், மற்ற குறைகளை டைரக்டர் தேவசகாயம் கவனிப்பதாக வாக்களித்துள்ளார் என்றும் தெரிய வருகிறது.

30—7—57 அன்று செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. சங்கத்தின் எதிர்கால ஆக்கவேலைகள் குறித்து பேசப்பட்டபின், கீழ்க்கண்டவர்கள் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டது:-டிரைவர் பாலசுந்தரம், பொன்னுசாமி, சாமுவேல்ராஜ், மார்க்கசகாயம், கேசவன், கோவிந்தசாமி, வேலு, பார்த்தசாரதி, மாரிமுத்து, இப்ராகிம், அரசு, இராசாபாதர், திருப்புவனம், இராஜசேகரன், ஆறுமுகம், வீராசாமி, தாஸ், திருநாவுக்கரசு, என். குப்புசாமி, கே. வி. இராகவன், கே. இராஜேந்திரன்.

கே. விநாயகத்திற்கு

சபைத் தலைவர் எச்சரிக்கை!

சென்னை, ஜூலை 31—

"நான் மிகவும் ருசிகரமான உபகேள்விகள் கேட்கவிருந்தேன். ஆனால் நான் அடிக்கடி கை தூக்கியும் சபாநாயகர் என்னை கவனிக்கவில்லை; நான் கேட்க முடியாமலே போய்விட்டது." என்று 27-ந் தேதியன்று நடைபெற்ற சட்டசபை கேள்வி நேரத்திற்குப் பிறகு திரு.கே. விநாயகம் புகார் செய்தார்.

உடனே சபாநாயகர் கோபத்துடன் 'அங்கத்தினர்கள் அனைவருக்கும் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்று சபாநாயகருக்குக் கட்டாயமில்லை. அங்கத்தினரை நான் கவனிக்காவிட்டால் அவர் வேறு வாய்ப்பை எதிர்பார்த்திருக்க வேண்டுமே தவிர, சபாநாயகரை கண்டிக்கக் கூடாது. அங்கத்தினர் பல முறை இப்படி என்மீது குற்றம் காட்டியிருக்கிறார். அடுத்த தடவை இம்மாதிரி குற்றம் கூறினால் அவர்மீது நான் நடவடிக்கை எடுக்க நேரிடும்' என்றார்.

என். ஜி. ஓ.-க்கள் கோரிக்கை

சென்னை, ஜூலை 31—

இந்திய அரசாங்கம் நியமிக்க உத்தேசித்துள்ள இரண்டாவது ஊதிய நிர்ணயக் குழுவின் பரிசீலனைக்குரிய பிரச்சினைகளில், அரசாங்க ஊழியர்களின் ஊதியப் பிரச்சினையையும் சேர்க்கவேண்டுமென்றும், அந்தக் குழுவின் முடிவுகள் மாநில அரசைக் கட்டுப்படுத்துவதாக இருக்கவேண்டுமென்றும் தமிழ் நாடு என். ஜி. ஓ.-க்கள் தீர்மானமொன்று நிறைவேற்றியுள்ளனர்.

நல்ல பாதையில் நடைபோடும் பண்டா

கொழும்பு, ஜூலை 31

விவேகம் நிறைந்தது!

நல்லெண்ணம் நிறைந்தது!

இலங்கைத் தமிழர்களின் பெடரல் கட்சிக்கும், தனக்கும் ஏற்பட்ட உடன்பாடு பற்றி இலங்கை பிரதமர் பண்டாரநாயகா இவ்வாறு கூறியுள்ளார்.

இனி நாடு முன்னேற முடியும் என்றும், மக்களிடையே நல்லெண்ணம் வளரும் என்றும், பொருளாதாரப் பிரச்சினையை தீர்ப்பதற்கு இவ்வுடன்பாடு வழி காட்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஊழியர்களின் நிதி

பாதுகாக்க ஒரு சட்டம்

புதுடில்லி, ஜூலை 31—

தனிப்பட்ட நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களிடம் வசூலித்துவரும் பிராவிடண்ட் நிதியைப் பாதுகாக்க மத்திய அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டுவரக்கூடும் என்று நிதி அமைச்சர் டி. டி. கே. மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

****

கழகத் தோழர்களுக்கு முக்கிய அறிவிப்பு

★

தி. மு. கழகக் கிளைகளின் நிர்வாகிகள் தேர்தல் பற்றிய செய்திகள், மாவட்டச் செயலாளரின் கையொப்பத்துடன் அனுப்பப்பட்டால்தான் 'நம் நாடு' இதழில் வெளியிடப்படும் என்ற பொதுச்செயலாளர் விடுத்திருக்கும் அறிக்கையை நினைவில் கொண்டு, கிளைக் கழகத் தோழர்கள் அந்தச் செய்திகளை மாவட்டக் கழகச் செயலாளர் கையொப்பத்துடன் அனுப்ப வேண்டுகிறோம்.

—ஆசிரியர்

****

பிரதாப முதலியார்

சரித்திர வெளியீட்டு விழா

அண்ணா கலந்துகொள்வார்

1—8—57 மாலை 6-மணிக்கு சென்னை அரண்மனைக்காரத் தெரு — செயிண்ட் மேரிஸ் மண்டபத்தில், தமிழில் முதல் முதலாக வெளிவந்த நாவல்—மாயூரம் வேதநாயகம் பிள்ளை எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' வெளியீட்டு விழா அமைச்சர் எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் நடைபெறும்; நீதிபதி பஷீர் அகமது சயீத் அவர்கள் புத்தகத்தை வெளியிடுவார்; அண்ணா அவர்கள் பாராட்டுரை வழங்குவார்.

கழகக் கூட்டம்

★

காரத்தொழுவு :

2—8—57 இரவு 7 மணிக்கு

தலைவர் : கே. என். சரபோஜி

பேசுவோர் :

நாஞ்சில் கி. மனோகரன்

கிருஷ்ணசாமி

ப. நாராயணன்

சாமி நரசிம்மன்

பாப்பாத்தி சாமிதுரை

திருப்பூர்—பெரியபாளையம் அறிவியக்கப்படிப்பகஆண்டுவிழா

2—8—57 காலை 9-30 மணிக்கு பிள்ளையார் கோயில் மைதானத்தில் மேற்படி ஆண்டுவிழா துவங்கும்; தோழர் க. அன்பரசு கொடியேற்றுவார்; 10-மணிக்கு விளையாட்டுப் போட்டி நடைபெறும். இரவு 7-மணிக்கு தோழர் முத்துசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர் இராமையா விகடக் கச்சேரி நடத்துவார்; தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் பரிசுகள் வழங்குவார்; தோழர்கள் க. அன்பரசு, எஸ். பால்ராஜ், சு. முனுசாமி, மு. முத்துரத்தினம், பாலசுந்தரம் ஆகியோர் பேசுவர்.

பண்டித நேருவின் வெற்றி நிலைத்தது!

அலகாபாத், ஜூலை 31—

இந்தியப் பிரதமர் நேருவின் தேர்தல் வெற்றிக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. பண்டிதருக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர் சீதாராம் கெம்கா என்பவர்.

தேர்தல் டிரிபியூனல் முறைப்படி அமைக்கப்படாததால் தன்னுடைய ஆட்சேப மனுவை விசாரிக்காது தடுக்கக் கோரிய கெம்காவின் 'ரிட்' மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

வெற்றிலை கொடிக்கால் பயிருக்கும் சாகுபடியாளர் நியாயவாரச் சட்டத்தின் நன்மைகள் கிடைக்கும் வகையில் சட்டத்தைத் திருத்துவதுபற்றி சர்க்கார் ஆலோசித்துக்கொண்டிருக்கிறதாம்.

மயிலையில் அண்ணா உரிமைமுழக்கம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"இந்த ஏற்பாட்டினைச் செய்ய 150 பேர்களைக் கொண்ட ஆளுங் கட்சி ஒருப்பட்டிருப்பது, நாட்டில் நல்ல நிலைகள் உருவாகி வருகின்றன என்ற நம்பிக்கையைத் தருவதாயிருக்கின்றது.

'சுருதி'யைக் கவனிக்கும் வித்துவான்போல்!

அடுத்தபடியாக, சட்டசபையில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் நம்மைப்பற்றிக் குறிப்பிடுகையில், 'இவர்கள் எப்பொழுது பேசினாலும் வடக்கு—தெற்கு என்றுதானே பேசுகிறார்கள்?' என்று குற்றஞ்சாட்டினார். குற்றஞ்சாட்டினார் என்பதைவிட, நமது குணத்தை எடுத்துரைத்தார்.

"சபை ஒன்றில் பாடுகிற சங்கீத வித்துவான், சபையில் அமர்ந்திருக்கும் ரசிகர்களை மட்டும் பார்த்துக்கொண்டே இருந்தால் போதாது. சிறந்த வித்துவானாயிருந்தால், 'கச்சேரியின்போது மீட்டப்படும் சுருதி, தவறாமல் இருக்கிறதா?' என்பதைக் கவனித்துக் கொள்வார். அதுபோலத்தான், நாட்டை மீட்கப் போராடும் தி. மு. கழகத்தவராகிய நாங்கள், சட்டசபையில், இலட்சியத்தை எப்போதும் கவனத்தில் வைத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது; அப்படியே கவனத்தில் வைத்துக்கொண்டிருக்கிறோம்.

"எந்தப் பிரச்சினையை எடுத்தாலும்—ஏரிக்குக் கரை இல்லை; பாலாற்றில் தண்ணீர் இல்லை; கனத் தொழில்கள் இங்கே இல்லவே இல்லை; சிறு தொழில்களும் வளரவில்லை—என்று இந்த மாநில சர்க்கார் அந்தப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் தேடுகிற அறிவும் ஆற்றலுங்கூடப் பெற்றிருந்தாலும், அதிகாரம் பெற்றிருக்கவில்லை என்ற உண்மையை, நாங்கள் சட்டசபையில் எடுத்துரைக்கிறோம்.

பேசும் பேச்சில் வித்தியாசம் எனக்கே?

"நாங்கள் சட்டசபையில், மேடைகளில் பேசுவதைப் போலவே பேசுவதாக கனம் சுப்பிரமணியம் கூறி வருத்தப்பட்டுக் கொண்டார்.

"சட்டசபையில் அப்படிப் பேசி பேச்சாளர்களாகவேண்டும் என்ற பஞ்சநிலையில் நாங்கள் இல்லை; அல்லது பிறர் பாராட்ட வேண்டும் என்பதற்காகவும் நாங்கள் அப்படிப் பேசவில்லை. மூன்றாவது, எந்த நிலையில் பேசுகிறோம் என்பதைப் பொறுத்தல்ல, பேசுகிற விஷயங்களுக்கு மதிப்புக் கிடைப்பது!

"மேடைப் பேச்சுக்கும் சட்டசபைப் பேச்சுக்கும் பொருள் விளக்கத்தில் வித்தியாசம் இல்லை; சுருதியில்தான் வித்தியாசம்!

"மேலும் சீனிவாச அய்யங்கார், சத்தியமூர்த்தி, பண்டித மோதிலால் நேரு, சர் சி. பி. இராமசாமி அய்யர். சர். ஆர். கே. ஷண்முகம் போன்றவர்கள் மேடையிலும் சட்டசபையிலும் நல்ல பேச்சாளர்களாக விளங்கினவர்கள்தான்!

"என் மந்திரி கக்கன் அவர்கள் அன்றொரு நாள் சட்டசபையில் பேசும்போது, மேடையில் அவர் எப்படிப் பேசுகிறாரோ அப்படித்தான் பேசினார்; நான் பாராட்டினேன். ஏனெனில், அப்படிப் பேசுவதுதான் உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதாகும். இதனைத்தான், குற்றம் சாட்டும் மந்திரி சுப்பிரமணியம் அவர்களுக்கு நான் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

கணைகளிலிருந்து தப்பிவிடவா?

"புள்ளி விவரங்களைக்காட்டிப் பேசினால், நாம் தொடுக்கும் கணைகளிலிருந்து தப்பிவிடலாம் என்று மந்திரி நினைக்கிறார்; அவ்வளவுதான்!

"பத்து ஆண்டுக்கால சமாசம் வேண்டும் என்று நம்மிடம் கேட்டாரே சுப்பிரமணியம், அவசரப்பட்டுத்தான் அவ்வாறு கேட்டுவிட்டார்; அதற்குக் காரணம் என்ன? நாம் காட்டிய புள்ளி விவரங்களா? அல்ல; நாம் எடுத்துரைத்த விஷயங்கள் அவரது உள்ளத்தைத் தொட்டது; அதனால்தான், 'பத்து ஆண்டுக்கால சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளலாம்' என்று கோரினார்.

"அவர் அப்படிக் கூறியதற்காக அவர் மீது பலத்த கண்டனங்கள் எழுந்தன; நான் அவருக்காகப் பரிதாபப்பட்டேன்.

நிதி அமைச்சரின் புதியதோர் தவறு

"உடனே அவர், 'நான் ஒன்றும் இந்த திராவிட நாடு பிரிவினையை ஆதரிக்கவில்லை—ஆதரித்ததும் இல்லை; இந்த நாசவேலையை ஆதரிக்கப்போவதும் இல்லை' என்று கூறினார். அப்படி அவர் கூறியதின் மூலம் புதியதொரு தவறையும் அவர் செய்தவராகிறார். திராவிடநாடு கோரிக்கை நாசவேலை என்றால், இந்த நாசவேலையை ஒத்திப் போடச் சொல்லலாமா? நாசவேலைக்கா வாய்தா கேட்பது—10 ஆண்டு தவணை கேட்பது?

"இதுபோன்ற தவறான வாதங்களில் ஈடுபடும் சுப்பிரமணியம் அவர்கள், 10 ஆண்டுக்காலத் தவணை கேட்பதற்கு—எனக்குப் பட்ட பொருள் எல்லாம், 'இன்னும் ஐந்தாண்டுக் காலத்திற்கு இந்த சர்க்காரில் மந்திரியாக இருந்துவிடுகிறேன்; மற்றொரு ஐந்தாண்டுக் காலத்திற்கு டெல்லி சர்க்காரில் மந்திரியாக இருந்துவிடுகிறேன்; அதற்குப் பிறகு எப்படி வேண்டுமானாலும் போங்கள்' என்று அவர் கூறுகிறார், என்பதுதான்!

பகைவனுடைய பார்வை தென்படவில்லையே!

"நான் சுப்பிரமணியம் அவர்களிடத்தில், ஒரு பகைவனுடைய குணம் — பார்வை — பேச்சு இவற்றை இன்னும் காணவில்லை; அவரது பேச்சு ஒரு பகைவனின் பேச்சாகவே எனக்குப்படவில்லை.

"வடநாட்டு ஆதிக்கம் பற்றி நாம் பேசுகிறோம்; ஆனால், நம்மைவிட காங்கிரசாருக்குத்தான்—அதிலும் மந்திரிமார்களுக்குத்தான் வடநாட்டு ஆதிக்கம் பற்றி அதிகமாகத் தெரியும்.

"மின்சார இலாகா பற்றிய ஒரு மசோதா சென்னை மேல் சபையில் விவாதத்திற்கு வந்தது. நமது மாநிலத்தின் சட்ட நிபுணர்கள், மசோதாவைத் தயாரித்துச் சட்டமாக்கினார்கள்; ஆனால் அந்தச் சட்டம் முறை தவறாமல் செய்யப்பட்டிருந்தும், அதன் முன்னுரையைத் திருத்த வேண்டும் என்கிறது டெல்லி!

"அதற்காக ஒரு திருத்த மசோதா மேல்சபையில் வந்தது; 'சட்டம் சரியாகத்தானே இருக்கிறது; ஏன் இந்தத் திருத்த மசோதா?' என்று கேட்டவர், நாங்கள் அல்ல—கே. பாலசுப்பிரமணிய அய்யர் என்பார்! என்ன பதில் சொன்னார் சுப்பிரமணியம்? 'நாம் இயற்றிய சட்டம் சரியாகத்தான் இருக்கிறது; ஆனால், என்ன செய்வது? டெல்லி சர்க்கார், திருத்தவேண்டும் என்கிறது; அதனால்தான்' என்றுதானே கூறினார்?

"இது எதைக் காட்டுகிறது? 'மேலே இருக்கிற எசமான் எதைச் சொன்னாலும் கேட்க வேண்டிய தாழ் நிலையில் இருக்கிறது, சென்னை சர்க்கார்' என்பதைச் சொல்லவில்லையா?"

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.